

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் விருதுநகர், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் உள்ள 8 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 44 கோடியே 48 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு, 6 கோடியே 58 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ள 772 புதிய வீடுகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்பட அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று 2025ஆம் ஆண்டு அகில இந்திய தொழிற் தேர்வில், இந்திய அளவில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் முதலிடம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 40 மாணவ – மாணவியர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் அமைச்சர் சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கட்டுமானம், கம்பி வளைப்பு, தச்சு, மின்பணியாளர் உள்ளிட்ட தொழிற்பிரிவுகளில் திறன் மேம்பாட்டு பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொன்.குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 6.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், முன்னாள் படைவீரர் நலத்துறை இயக்குநர் கே.பாலசுப்ரமணியம் சந்தித்து, ஒன்றிய பாதுகாப்புத் துறையின் சார்பில் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாநாட்டில், தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை அளித்துள்ள சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக வழங்கப்பட்ட பாராட்டுச் சான்றிதழ் மற்றும் முற்போக்கு மாநிலம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நலத்துறை என்பதற்கான கேடயம் (Progressive State – Rajya Sainik Board, Tamil Nadu) ஆகியவற்றை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வில், அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் உள்பட அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாடு வன உயிரின ஆணையத்தின் ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில் – தமிழ்நாட்டில் உள்ள

# 4 உயிரியல் பூங்காக்களுக்கு ரூ 35 கோடி நிதி ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒப்புதல்!

**சென்னை, அக்.8 -**

**தமிழ்நாடு வன உயிரின ஆணையத்தின் ஆட்சிமன்ற குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் உள்ள 4 உயிரியல் பூங்காக்களுக்கு ரூ.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (6.10.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு வன உயிரின ஆணையத்தின் 22-வது ஆட்சிமன்றக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாநிலம் முழுவதும் உள்ள 4 உயிரியல் பூங்காக்களின் விரிவான மேம்பாட்டுக்காக 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், 4 உயிரியல் பூங்காக்களின் அடிப்படைக் கட்டமைப்பை வலுப்படுத்துதல், விலங்குகளின் நலனை மேம்படுத்துதல் மற்றும் பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துதல் தொடர்பான தற்போதைய முயற்சிகள் மற்றும் புதிய திட்டங்களை ஆய்வு செய்தார்.

வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, ஏற்கனவே அதன் மின்சாரத் தேவையில் 80 சதவிகிதத்தை சூரிய மின்சக்தியின் மூலம் பூர்த்தி செய்து வருகிறது. முழுமையான கார்பன் நடுநிலைமையை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாட்டின் உயிரியல் பூங்காக்கள் அணுகல்தன்மை, மின்னணு மயமாக்கம் மற்றும் காலநிலை மீள்தன்மை ஆகிய வற்றில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் கண்டுள்ளன.

**உயிரியல் பூங்காக்களின் சிறப்பம்சங்கள்**

வண்டலூர் - அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில், 180 கிலோவாட் (KW) சூரிய சக்தி மின் நிலையம் நிறுவப்பட்டு, பறவைகள் சரணாலயம் மற்றும் இரவு நேர விலங்குகள் இல்லம் புதுப்பிக்கப் பட்டு, மாற்றுத்திறனாளிகளின் வசதிக்காக சாய்வு தளங்கள் (ramps), வழுக்காத ஓடுகள் (anti-skid tiles) அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 90 சதவிகித த்திற்கும் அதிகமான நுழைவுச்சீட்டு விற்பனை UPI, இணையவழி மற்றும் Whatsapp வழியாக விற்பனை செய்யப்படுகிறது. மேலும், பேட்டரி மூலம் இயங்கும் புதிய வாகனங்கள் பூங்காவிற்குள் போக்குவரத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கிண்டி - சிறுவர் இயற்கைப் பூங்காவில், 20 கோடி ரூபாய் செலவில் சர்வதேச தரத்திற்கு ஏற்ப பூங்கா மறுவடிவமைப்பு செய்யப்பட்டு, சீரமைக்கப்பட்ட உணவு விடுதி, ஓலை வேய்ந்த கூரையுடன் கூடிய விலங்குகள் தங்குமிடங்கள் அமைக்கப்பட்டு, பாதைகளும் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தியாவின் மிகப்பெரிய வேடந்தாங்கல் பறவைக்கூடமும் (20 மீட்டர் உயரம்) அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிய சிறுவர் நூலகம், செல்ஃபி பாய்ண்ட், மின்னணுமூலம் நுழைவுச்சீட்டு வசதி மற்றும் பார்வையாளர் வசதிகள் ஆகியவையும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

சேலம் – குரும்பப்பட்டி உயிரியல் பூங்காவில், மேம்படுத்தப்பட்ட பல்நோக்கு விளக்கம் அளிக்கும் மையம் (interpretation centre), குழந்தைகள் விளையாடும் பகுதி மற்றும் மான் இருப்பிடங்கள், சிசிடிவி கேமராக்கள், பலப்படுத்தப்பட்ட எல்லை வேலி, மேம்படுத்தப் பட்ட பார்வையாளர் வசதிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வேலூர் - அமிர்தி உயிரியல் பூங்கா, சக்கர நாற்காலிகள், உணவக வசதிகள், வாகன நிறுத்துமிடம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட கழிவறைகள் போன்ற வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், குரும்பப்பட்டி மற்றும் அமிர்தி உயிரியல் பூங்காக்களில் விலங்குகளின் வாழ்விடங்கள் மற்றும் பொது வசதிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வண்டலூர் – அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி - சிறுவர் இயற்கைப் பூங்கா, சேலம் - குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா, வேலூர் - அமிர்தி உயிரியல் பூங்கா ஆகிய பூங்காங்களின் மேம்பாட்டிற்காக 35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கினார்.

இக்கூட்டத்தில், உயிரியல் பூங்கா நிர்வாகத்தின் தரத்தை உயர்த்திடவும், விலங்குகளின் நலனை உறுதி செய்திடவும், பொதுமக்களிடம் வன விலங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், வனம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஏ.ஆர். ராகுல்நாத், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் துறை தலைவர் ஸ்ரீனிவாஸ் ரெட்டி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, வனத்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பீகார் சட்டசபைக்கு நவ. 6,11 தேதிகளில்

# 2 கட்டங்களாக தேர்தல்! 14 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை!

## அக். 10 முதல் வேட்புமனு தாக்கல் தொடக்கம்!

புதுடெல்லி, அக்.8–

பீகார் சட்டசபை தேர்தல் நவம்பர் 6 மற்றும் 11ஆம் தேதிகளில் 2 கட்டங்களாக நடைபெறும் என்றும் வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14ஆம் தேதி அன்று நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பீகாரில் 243 சட்டசபை தொகுதிகளுக்கான தேர்தல் தேதியை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. இது தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

பீகாரில் மொத்தம் 243 சட்டசபை தொகுதிகள் உள்ளன. மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 7.43 கோடி, இதில் சுமார் 14 லட்சம் பேர் முதல் முறை வாக்காளர்களாக உள்ளனர். பீகார் தேர்தல் அமைதியான மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் நடத்தப்படும்.

அனைத்து அதிகாரிகளும் முற்றிலும் பாரபட்சமற்ற முறையில் செயல்பட வேண்டும். எந்தவொரு ஊடகம் அல்லது தளத்திலும் ஏதேனும் போலி செய்திகள் அல்லது தவறான தகவல்கள் இருந்தால், அதுகுறித்து விசாரணை நடத்தப்படும். போதைப் பொருள், மதுபானம் மற்றும் ரொக்க பரிவர்த்தனையைத் தடுக்க அனைத்து சோதனைச் சாவடிகளிலும் கடுமையான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படும். பீகார் மாநில சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெறும்.

நவம்பர் 6–ம் தேதி மற்றும் 11 ஆகிய தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்கு எண்ணிக்கை நவம்பர் 14–ம் தேதி நடைபெறும். முதல் கட்ட தேர்தலுக்கு அக்டோபர் 10–ம் தேதி வேட்பு மனுதாக்கல் தொடங்குகிறது. முதல் கட்ட வேட்பு மனுதாக்கலுக்கு கடைசி நாள் அக்.17–ம் தேதி ஆகும். மனுக்களை திரும்பப்பெற அக்.20–ம் தேதி கடைசி நாள் ஆகும். பீகார் 2–ம் கட்ட தேர்தலுக்கு அக்.13–ல் வேட்பு மனு தாக்கல் தொடங்குகிறது. 2–ம் கட்ட தேர்தலில் மனு தாக்கலுக்கு அக்.20–ம் தேதி கடைசி நாள் ஆகும். அடுத்த நாள் வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும்.

2–ம் கட்ட தேர்தலில் வேட்புமனுக்களை திரும்பப்பெற அக்.23–ம் தேதி கடைசி நாள் ஆகும். முதல் கட்டத்தில் 121 தொகுதிகளுக்கும் 2–ம் கட்டத்தில் 122 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது. இந்த 2 கட்டங்களில் பதிவாகும் வாக்குகள் நவம்பர் 14 ஆம் தேதி அன்று எண்ணப்படும்.

இவ்வாறு தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் கூறினார்.

### உடனடியாக வந்து உயிர்சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய

# செந்தில் பாலாஜிக்கு நன்றி சொல்லாவிட்டாலும் இடையூறு செய்யாதீர்கள்!

## கரூர் துயர சம்பவ இடத்தை பார்வையிட்ட பின் கமலஹாசன் எம்.பி. பேட்டி!

கரூர், அக். 8 –

நேரத்திற்கு வந்து மேலும் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய செந்தில்பாலாஜிக்கு நன்றி சொல்லாவிட்டாலும் இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும் என கரூர் சம்பவ இடத்தை பார்வையிட்ட கமலஹாசன் எம்.பி. செய்தியாளர்களிடம் கூறினார்.

கரூர் வேலுச்சாமிபுரம் விஜய் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் மயக்கம் அடைந்து 41 பேர் இறந்தனர். இந்த சம்பவத்தை அடுத்து யாருக்கும் ஆறுதல் கூற விஜய் வரவில்லை. அறிவித்த உதவி தொகையையும் வழங்கவில்லை. அடுத்த கட்ட தலைவர்கள் கைதுக்கு பயந்து தலைமறைவாகி விட்டனர். இந்த சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்துள்ளனர். 110 பேர் காயம் அடைந்தனர். உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ரூ. 10 லட்சம், காயமடைந்த குடும்பத்திற்கு தலா ஒரு லட்சமும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டு வருகிறது. சம்பவம் நடந்தவுடன் இதை கேள்விப்பட்டு உடனடியாக கரூர் அரசு மருத்துவமனைக்கு வந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனை அறிவித்தார்கள்.





மக்கள் நீதி மய்யம் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமலஹாசன் அவர்கள், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ.வுடன் சென்று, கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை, நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகள் வழங்கினார். மேலும் விபத்து நிகழ்ந்த இடத்தை ஆய்வு செய்தார். மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மக்கள் நீதி மய்யம் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான கமலஹாசன் அவர்கள், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்எல்ஏ உடன் சென்று, கரூரில் எதிர்பாராத கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை, நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். நிவாரண உதவிகள் வழங்கினார்கள்.

மேலும் விபத்து நிகழ்ந்த இடத்தை ஆய்வு செய்தார். கழக நிர்வாகிகள், மக்கள் நீதி மய்யம் கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்..

பகுதியை பார்வையிட்ட மக்கள் நீதி மையம் கட்சி தலைவர் கமலஹாசன், வேலுச்சாமி புரத்தைச் சேர்ந்த உயிரிழந்த மகேஸ்வரி (43 வயது) இல்லத்திற்கு சென்று அவரது உறவினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். அப்போது நிவாரண உதவியாக 1 லட்சம் ரூபாய்க்கான காசோலையை உறவினர்களிடம் வழங்கினார்.

பின்னர் கமலஹாசன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஊடகங்கள் வாயிலாக பல உண்மைகள் இன்று வெளிவந்துள்ளது. இது யாரையும் பாராட்டுவதற்கான நேரம் இல்லை. செந்தில் பாலாஜி உடனடியாக எப்படி வந்தார் என்ற குற்றச்சாட்டு வைக்கின்றனர். இது அவருடைய சொந்த ஊர், அவர் எப்படி உடனடியாக வந்தார் என்று கேள்வி எழுப்புவது தவறு. நேரத்துக்கு வந்து மேலும் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றிய செந்தில் பாலாஜிக்கு நன்றி சொல்ல வேண்டும்.இது அவர் ஏரியா.அவரது மக்கள். அவர் வராமல் யார் வருவார்கள்?.

பெரும் மக்கள் உயிர் சேதம் ஏற்படாமல் காப்பாற்றினார். அவருக்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டாம். இடையூறு செய்யாமல் இருக்க வேண்டும். அவர் செய்வதை செய்யட்டும். செந்தில் பாலாஜி ஏன் வந்தார் என கேட்பதைவிட வந்ததை நினைத்து சந்தோஷப்பட வேண்டும்.அது அவர் கடமை. என்ன முடியுமோ அதை செய்திருக்கிறார்

உயிரிழந்தவர்களை எத்தனை பேர் என்று எண்ணிக்கை அளவில் பார்க்க கூடாது. அவர்களுக்கும் குடும்பம் உள்ளது என்பதை பார்க்க வேண்டும். தமிழ்நாடு அரசும், முதலமைச்சர் அவர்களும், சிறப்பாக செயல்பட்டுள்ளனர். இது போன்ற கூட்டங்களை ஊரிலிருந்து ஒதுக்குப்புறமான இடங்களில் நடத்த வேண்டும்.

த.வெ.க. சார்பில் முன்னதாக அனுமதி கேட்கப்பட்ட லைட் ஹவுஸ் கார்னர் பகுதியில் ஆற்றில் மக்கள் விழுந்திருந்தால், இதை விட அதிக உயிர் சேதம் ஏற்பட்டிருக்கும்.

நான் பேசுவது மனிதம். எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்டோர் பேசுவது அரசியல். இந்த நேரத்தில் அரசியல் பேசுவது தவறு. அடுத்தடுத்த மாதங்களில் அது குறித்து பேசலாம். இனிமேல் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க, அனைத்துக் கட்சிகளும் அமர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி முடிவெடுக்க வேண்டும். முதலமைச்சரும் அதற்கான சட்டத்தை இயற்ற வேண்டும்.

நாம் எவ்வளவு பணம் கொடுத்தாலும், உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு ஈடாகாது. யார் எவ்வளவு பணம் கொடுத்தார் என்று போட்டி வேண்டாம். அவர்களுக்கு நீதி தான் வேண்டும். இது யாரையும் குற்றம் சொல்வதற்கான நேரமில்லை. இதில் நான் உட்பட அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். அதே சமயத்தில், குற்றம் சாட்டுபவர்கள் யார் என்பதையும் பார்க்க வேண்டும்.

விஜய்க்கு நான் அறிவுரை சொல்லத் தேவையில்லை. நான் என் சார்பில் மட்டுமே பேச வந்திருக்கிறேன். அரசியலில் என்னை விட மூத்தவர்கள் உள்ளனர். அவரிடம் கேட்க வேண்டிய கேள்விகளை நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது. காலம் கடந்து அறிவுரை சொல்வதில் அர்த்தம் இல்லை.

இனி அவர் ஒரு தலைவராக செய்ய வேண்டியதை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். நான் எவ்வளவு நிதி உதவி கொடுத்தேன் என்று சொல்லிக்காட்டுவது அசிங்கம். சட்டம் ஏற்பாடு செய்து வருகிறது. எஸ்ஐடி. குழு அமைக்கப்பட்டுள்ளது. நாம் விசாரிப்பதை விட குழுவின் விசாரணை ஆழமாகவும், உறுதியாகவும், நேர்மையாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். விஜய்க்கு என்ன அறிவுரை கூறுகிறீர்கள் என நீங்கள் கேட்கிறீர்கள். நீதிமன்றம் சொல்லும்.

இவ்வாறு அவர் கூறினார்.